

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (13.11.2024) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், எடப்பாளையம் ஏரி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்

# 1,476 புதிய குடியிருப்புகள் கட்டும் பணிகள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

## ஆய்வுக்குப்பின் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, நவ.14-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (13.11.2024) இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி காலனியில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தையும், அயனாவரம் யுனைடெட் இந்தியா நகர், வட்டார நூலகத்தையும், ஸ்டான்லி அரசு மருத்துவமனை அருகிலுள்ள நீர்வள ஆதாரத் துறைக்கு சொந்தமான பணிமனையில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்படவுள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய 776 புதிய குடியிருப்புக்களுக்கான இடத்தினையும் மற்றும் வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெரு மற்றும் அண்ணா பிள்ளை தெருவில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்படவுள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய 700 புதிய குடியிருப்புக்களுக்கான இடத்தினையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்களால் இந்த ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் தேதி வடசென்னை வளர்ச்சி திட்ட பணிகள் அறிவிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தில் 218 பணியில் எடுத்துக் கொள்ளப்பட்டு அதில் சென்னை வளர்ச்சி குழுமத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை இன்று காலை முதல் ஆய்வு செய்து வருகின்றோம். குறிப்பாக கொளத்தூரில் இருக்கின்ற வண்ண மீன்கள் விற்பனை உரிமையாளர் மற்றும் தொழிலாளர்களுக்கு என்று சுமார் 54 கோடி செலவில் 20 ஏக்கர் பரப்பளவில் 138 கடைகள் கட்டுமான பணியை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அந்தப் பணிகளின் முன்னேற்றம் குறித்து இன்று ஆய்வினை மேற்கொண்டோம். அதைத் தொடர்ந்து வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அயனாவரம், யுனைடெட் காலனியில் 40 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட நூலகத்தை பார்வையிட்டு அந்த நூலகத்தினை மேம்படுத்துவதற்குண்டான ஆய்வினை மேற்கொண்டோம். அதைத் தொடர்ந்து வடசென்னையில் சாலையோரம் மற்றும் கால்வாய் ஓரம் வசிக்கின்ற மக்களுக்காகவும், பொருளாதாரத்தில் நலிவுற்று இருக்கின்ற மக்களுக்காகவும், அவர்களுக்கு நிரந்தர வாழ்வாதாரம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதற்காக இந்த இடத்தில் கூட்டுறவு பண்டகசாலை என்ற பெயரில் இருக்கின்ற இந்த இடத்தில் சுமார் 776 வீடுகளுக்கான கட்டுமான பணிகளை மேற்கொள்ள இருக்கின்றோம். அதைப்போல வால்டாக்ஸ் ரோடு, வார்டர் பேஷன் சாலை என்று சொல்லப்படுகின்ற தண்ணீர் தொட்டி தெருவில் 700 வீடுகளுக்கான கட்டுமான பணிகளை என்று ஒட்டுமொத்தமாக 1,476 குடியிருப்புகளை கட்டமைக்கின்ற பணிகளை இந்த மாத இறுதியில் தமிழக முதல்வர் அவர்களின் பொற்கரங்களால் இந்த கட்டுமான பணிகளை தொடங்கி வைக்க இருக்கிறார்கள்.

இந்த கட்டுமான பணி என்பது திட்டமிடப்பட்டு அடுத்த ஆண்டு 2025 டிசம்பர் மாதத்திற்குள் மக்களிடம் ஒப்படைப்பதற்குண்டான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். வடசென்னை வளர்ச்சி திட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழக முதல்வர் அவர்களின் சிந்தனையில் தோன்றிய திட்டம் என்பதால் தொடர்ந்து இந்த திட்டத்தினுடைய ஆய்வுப்பணிகளை தமிழக துணை முதலமைச்சர் அவர்களிடம் இந்த திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பணிகள் தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுத்துறை, பொதுப்பணித்துறை, நீர்வளத்துறை போன்ற அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து இந்த திட்டத்தை விரைவாக செயல்படுத்த உத்தரவிட்டதோடு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த பணிகளை தொடர்ந்து கவனித்து வருகின்றார்.

இந்த திட்டத்தினுடைய நோக்கம் வறுமை கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்களுக்காகவும், கல்வி கற்பதற்கு வெகு தூரம் செல்கின்ற சூழ்நிலை உள்ளவர்கள், சுயமாக பணி செய்வோருக்கு உண்டான தகுந்த சூழ்நிலைக்கு ஏற்ப கட்டமைப்புகள் போன்றவற்றை உருவாக்குவது, இந்த திட்டத்தினுடைய நோக்கமாக இருக்கின்றது. அந்த வகையில் நூலகங்களை புதுப்பிப்பதும், முதல்வர் படிப்பகம் என்ற பெயரிலே கோவர்கிங் ஸ்டேஷன், படிப்பதற்கென்று ஒரு தளத்தையும், பணி செய்வதற்கென்று ஒரு தளத்தையும் உருவாக்குகின்றோம். இந்த முயற்சியை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் ஈடுபட்டு இருக்கின்றது. அந்த வகையில் வடசென்னை பகுதிக்குட்பட்ட துறைமுகம், வில்லிவாக்கம், எழும்பூர், திருவிக நகர், ராயபுரம், ஆர் கே நகர், பெரம்பூர் ஆகிய பகுதிகளில் 12 நூலகங்களை தரம் உயர்த்தவும், அவர்கள் படிப்பதற்குண்டான இன்டர்நெட் வசதியுடன் அரங்குகள் அமைப்பதும், அதே போல் கோவர்கிங் ஸ்டேஷன்ஸ்ல் கூட்டரங்கம் (Conference Hall) அமைப்பதும், அவர்கள் பணி செய்வதற்குண்டான அனைத்து வசதிகள் ஏற்படுத்தி தருவதையும் நோக்கமாகக் கொண்டு அந்த பணிகளையும் தொடர்ந்து செய்து வருகின்றோம்.

**அதிகாரிகளின் ஒத்துழைப்பு!**

வடசென்னை பகுதிக்கு வளர்ச்சி என்பது கடந்த பத்தாண்டு கால ஆட்சி சற்று நலிவுற்று இருந்ததை முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நேரடி கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு, வடசென்னையை வாடா சென்னையாக ஆக்குகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார். அதற்கு பேருதவியாக எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய காகர்லா உஷா, நீர்வளத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் மணிவாசன், மாநகராட்சி ஆணையாளர் குமரகுருபரன், சி.எம்.டி.ஏவின் உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, வட்டார துணை ஆணையாளர் ஆகியோர் அனைத்து துறை அதிகாரிகளும் பெருமளவு ஒத்துழைப்பாக இருக்கின்றார்கள். தமிழக முதல்வருடைய கனவை நிச்சயமாக நினைவாக்குவோம். வடசென்னை மக்களுடைய அடிப்படை தேவைகளை முழு முயற்சியோடு நிறைவேற்றுவதற்கான ஆக்கபூர்வமான அனைத்து பணிகளையும் மேற்கொள்வோம். தினந்தோறும் இது போன்ற வளர்ச்சி திட்ட பணிகளை ஆய்வு செய்து அந்த பணிகளுடைய முன்னேற்றங்கள் குறித்தும், அந்தப் பணிகளுக்கு தேவையான அனைத்து வகையான உதவிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்.

அதே போல் பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் என்று சாலைகளை விரிவாக்குகின்ற திட்டங்களை கையில் எடுத்து இருக்கின்றோம். அது குறித்த ஆய்வு கூட வருகின்ற 15ஆம் தேதி மேற்கொள்ளப்பட இருக்கின்றது. துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தொடர்ந்து நெருக்கடியான இந்த பகுதிகளில் சாலையை அகலப்படுத்துவதற்கும் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, மாற்று இடத்திற்கு கொண்டு செல்வதற்கும், பாதசாரிகளுக்குண்டான வழி வகைகளை செய்கின்ற ஒரு அரசாக இருக்கின்றது. இந்த நெருக்கடியை கருத்தில் கொண்டு தான் சென்னை, பிராட்வே பேருந்து நிலையம் 74 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பேருந்து நிலையம் அதில் ரூ.824 கோடி செலவில் ஒரு பெரும் திட்டத்தை தயாரித்து மல்டி லெவல் கார் பார்க்கிங் உட்பட வணிக வளாகங்கள் உட்பட பழைய கட்டடமான குரளகம் உட்பட அனைத்தையும் 9 மாடியில் கொண்ட கட்டிடமாகவும், அதேபோல் தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் பேருந்து நிலையத்திற்கும், மீதம் இருக்கின்ற 6 தளங்கள் வணிக வளாகத்திற்கும் பயன்படுத்தப்பட இருக்கின்றது. இதே போல் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கும் இந்த வடசென்னை வளர்ச்சி திட்ட தேவை அதிக முக்கியத்துவம் தந்திருக்கின்றார் நம் தமிழக முதல்வர் அவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிவு நீர் சீராக செல்வதற்குண்டான பாதைகள் போன்றவைகளும் இந்த திட்டத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

### ஒன்றியச் செயாளர் கெ.ஞானசேகரன் - எஸ்.தயாளன் ஏற்பாட்டில்

# உத்திரமேரூர் ஒன்றியம் இளநகர் ஊராட்சி அ.தி.மு.க. வினர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில்

காஞ்சிபுரம், நவ. 14 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. முன்னிலையில், உத்திரமேரூர் ஒன்றியம் இளநகர் கிராம கிளைக் கழகச் செயலாளரும் ஊராட்சி மன்ற துணைத் தலைவருமான எஸ்.மோகன்தாஸ் தலைமையில் அ.தி.மு.க. வினர் 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி கழகத்தில் இணைந்தனர். இணைந்த அ.தி.மு.க. வினருக்கு க.சுந்தர் எம்.எல்.ஏ. சால்வை அணிவித்து வரவேற்றார். மேலும் ஒன்றியச் செயலாளர் கெ.ஞானசேகரன் அவர்களுக்கு சால்வை அணிவித்து வரவேற்றார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஒன்றியம் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க. சுந்தர் முன்னிலையில் உத்திரமேரூர் ஒன்றிய கழக செயலாளரும் ஒன்றிய குழு உறுப்பினருமான கெ.ஞானசேகரன் மற்றும் ஒன்றிய கழக துணை செயலாளரும் ஒன்றிய குழு உறுப்பினருமான எஸ்.தயாளன் என்கின்ற ருத்திர கோட்டி ஏற்பாட்டில் இளநகர் கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. கிளைக் கழக செயலாளர் மற்றும் ஊராட்சி மன்ற துணை தலைவருமான எஸ்..மோகன்தாஸ் தலைமையில் அ.தி.மு.க.வினர் கழகதில் இணைந்தனர்.

அந்த ஊராட்சியைச் சார்ந்த ஏ.ஞானபிரகாசம், எஸ்.பச்சையப்பன், டி. பழனி, எஸ். தயாளன், வி. சதீஷ், வி. தட்சிணாமூர்த்தி, பி. ஸ்ரீதர் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் தி.மு.கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இணைந்த அ.தி. மு.க.வினருக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம். எல்.ஏ. சால்வை அணிவித்து வரவேற்றார்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் மாவட்ட செயலாளரும், அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் ஆலோசனையின் பேரில் செம்பரம்பாக்கம், வரதராஜபுரம், மேப்பூர், நசரத்பேட்டை, அகரமேல் ஆகிய ஊராட்சிகளில் உள்ள பாக முகவர்கள் மற்றும் பாக பணிக்குழு உறுப்பினர்கள் ஆய்வு கூட்டம் ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் நடைபெற்றது பூந்தமல்லி தொகுதி எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி, தொகுதி பொறுப்பாளர் பி.டி.சி.செல்வராஜ் ஆகியோர் கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினர் உடன் பொதுகுழு உறுப்பினர் வி.குமார், தேர்தல் பொறுப்பாளர்கள் வழக்கறிஞர் என்.பி. மாரிமுத்து, ஒன்றிய நிர்வாகிகள் டி.அண்ணாமலை, ஏ.ஜனார்தனன், எம்.இளையான், கே.எஸ்.புகழேந்தி, சுமதி குமார், ஏ.ஆர்.பாஸ்கர், வயலை ஆர்.பிரபாகரன், வழக்கறிஞர்கள் ஜி.டி.அருண்குமார், எம்.அர்த்தகிரி அருளாளன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஏ.ஜி.ரவி, என்.சண்முகம், டி.திருமலை ராஜ், கே.கேசவன், திருலோகசுந்தர், பாலன், கே.ஜி.ஆர். ஸ்டாலின், பரிமேளழகன், பவானி, சுமதி அத்திகிரி, மற்றும் கிளை செயலாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்களின் தூத்துக்குடி மாவட்டச் சுற்றுப்பயணம்

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, தூத்துக்குடி மாவட்டத்தில் 14.11.2024 (வியாழக்கிழமை) ஒரு நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு.

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
| --- | --- | --- |
| காலை 09:30 மணி | தூத்துக்குடி வடக்கு மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுடன் சந்திப்பு. | சத்யா ரிசார்ட், தூத்துக்குடி. |
| காலை 11:00 மணி | இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு.தங்கபாண்டியன் அவர்களின் இல்லத் திருமண விழா. | ஏ.வி.எம்.கமலவேல் திருமண மண்டபம், எட்டயபுரம் சாலை, தூத்துக்குடி. |
| மதியம் 12:00 மணி | அரசு நலத்திட்டப் பணிகள் ஆய்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். | மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தூத்துக்குடி. |
| மாலை 04:30 மணி | கழகப் பவளவிழாவை முன்னிட்டு, தூத்துக்குடி வடக்கு மாவட்டம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல். | குறிஞ்சி நகர், பிரதான சாலை, கலைஞர் மைதானம், தூத்துக்குடி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18

நாள் : 12-11-2024



# திருக்குவளை - அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியில் ஆய்வு!

## அமைச்சர்கள் கோவி.செழியன் - அன்பில் மகேஷ் பொய்யாமொழி மேற்கொண்டனர்!

நாகை, நவ. 14 -

நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளை அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரியில் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (13-11-2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ப. ஆகாஷ். மீன்வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன், கீழ் வேளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.பி.நாகை மாலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் மாணவர்களுடன் கலந்துரையாடி தெரிவித்ததாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வியில் மாணவ, மாணவிகள் சிறந்து விளங்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். கல்வி நிலையில் குறிப்பாக உயர்கல்வி, மக்களின் வாழ்வியல் திறன்களை வலுப்படுத்தும் வளமுடையது. அன்றாட வாழ்க்கையை வாழ்வதற்கு உயர்கல்வி உறுதுணையாக இருப்பதோடு அன்றி, வாழ்க்கையில் உயர்நிலையை எட்டுவதற்குரிய அடித்தளமாகவும் அமைகிறது. உயர்கல்வி, மனிதவள மேம்பாட்டுக்கான நவீன இலட்சியக் குறியீடுகளை நோக்கமாகக் கொண்டு, நாட்டை மேம்படுத்துவதற்கான அடிப்படை அணுகுமுறையைக் கொண்டுள்ளது. நிறுவனங்களில் புதுமைகளையும், நவீன தொழில்நுட்பத்தையும், மேலோங்க காண்பதே உயர் கல்வித்துறையின் தொலை நோக்கமாகும். கல்வித்தரத்தை மேம்படுத்துவதே முக்கியமான நோக்கமாக அமைகிறது. உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்கும் நிலையில், கிராமப்புற மாணவர்களுக்கும். பின்தங்கிய மற்றும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் உயர்கல்வியின் வாயில்களையும் வாய்ப்புகளையும் திறந்து வைப்பதும் உயர்கல்வித்துறையின் உள்ளார்ந்த விருப்பமாகும். நமது இளைஞர்கள் தங்களுடைய தனித் திறமைகளையும், செயல் திறன்களை யும், கண்டறிந்து வளர்த்துக் கொள்ளவும். அவற்றை மேம்படுத்திக் கொள்ளவும். உயர்கல்வித்துறையின் இலக்காகும். ஆகவே, அனைவரும் உயர்கல்விபெற்று ஒளிர வேண்டும் என்பதே இத்துறையின் நோக்கமாகும் என தெரிவித்தார்.

திருக்குவளை அண்ணா பல்கலைக்கழக உறுப்பு கல்லூரியில் உள்ள மாணவர் விடுதி. கழிவறை. சமையலறை மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மாணவர்களுக்கு முதலமைச்சர் அவர்களால் பல்வேறு நலத்திட்டங்கள் முறையாக சென்றடைகின்றதா என்பதையும், கற்பிக்கப்படும் கல்வி தரத்தினையும் கேட்டறிந்தார். கல்லூரியிலிருந்து விடுதிகளுக்கு செல்லும் சாலை அமைத்திட உடனடியாக திட்ட அறிக்கை தயார் செய்திட துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். பின்னர் முதலமைச்சர் கோப்பை பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பதக்கங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்களும், மாவட்ட பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அவர்களும் வழங்கினர்.

இந்த ஆய்வின்போது திருக்குவளை அண்ணா பல்கலைக் கழக உறுப்பு கல்லூரி முதல்வர் திரு.கலைச்செல்வன், அரசு அலுவலர்கள் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# இன்று 136 - வது பிறந்த நாள்! ஜவஹர்லால் நேரு திருவுருவச்சிலைக்கு மாலை!

## அமைச்சர்கள் அணிவிக்கின்றனர்!

சென்னை, நவ. 14 -

பண்டித ஜவர்ஹலால் நேரு அவர்களின் 136-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள் இன்று ( 4.11.2024) காலை 9.30 மணியளவில் சென்னை, கிண்டி, கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் 1889ஆம் ஆண்டு நவம்பர் 14ஆம் நாள் பிறந்தார். தன்னுடைய பள்ளி படிப்பு முதல் பாரிஸ்டர் பட்டம் வரை இங்கிலாந்து நாட்டிலுள்ள புகழ்மிக்க பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயின்றார். அவர் படிக்கின்ற காலத்திலேயே உலக அரசியலில் அதிக கவனமும், குறிப்பாக, அடிமைப்பட்டிருந்த நாடுகளின் மீது அதிக அக்கறையும் கொண்டிருந்தார். 1919ஆம் ஆண்டு நடந்த ஜாலியன் வாலாபாக் படுகொலைச் சம்பவம் அவரது தீவிர அரசியல் வாழ்க்கைக்கு காரணமாக அமைந்தது.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் "நவீன இந்தியாவின் சிற்பி" என்று மக்களால் பெரிதும் போற்றப்பட்டார். அண்ணல் காந்தியடிகளின் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவர்களில் ஒருவராக உருவெடுத்தார். அன்னிய நாட்டின் அடிமைத் தனத்தை எதிர்க்கின்ற வகையில், ஆங்கிலேய அரசுக்கு எதிராக அடுத்தடுத்து அறிவிக்கப்பட்ட பல்வேறு தொடர் போராட்டங்களில் ஏறத்தாழ 9 ஆண்டு காலம் சிறை தண்டனை பெற்றார்.

சிறையில் இருந்த நாட்களில் அவர் எழுதிய நூல்களில் "உலக வரலாற்றின் துளிகள்", "இந்தியாவின் தரிசனம்" மற்றும் "விடுதலையை நோக்கி" ஆகிய நூல்களும், சுதந்திர தாகம் குறித்துத் தன் மகள் இந்திராகாந்தி அவர்களுக்கு எழுதிய 137 கடிதங்களின் தொகுப்பான 'சுயசரிதை' இன்றளவும் உலகளவில் பேசப்படும் சிறந்த நூல்களாகும்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்தியத் திருநாட்டின் முதல் பிரதமராக ஏறத்தாழ 16 ஆண்டு கால தொடர் ஆட்சியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள், கலப்புப் பொருளாதாரக் கொள்கை, பஞ்சசீலக் கொள்கை, அணிசேராக் கொள்கை போன்ற வெளியுறவுக் கொள்கைகளை வகுத்தார். மேலும், அறிவியல், அணுசக்தி, விண்வெளி மற்றும் வேளாண் தொழில் நுட்ப வளர்ச்சிக்கான கட்டமைப்புகளை அமைத்தார்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் ஆட்சியில், நெருக்கடிக் காலத்தில் மாநிலங்களின் ஒற்றுமை மற்றும் நலன் கருதி, கொண்டு வரப்பட்ட மாநில மறுசீரமைப்பு, அலுவல் மொழி ஆணையம் ஆகியவை குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்வுகளாகும். மொழி வாரியான பல்வேறு மாநிலங்களைக் கொண்டிருந்த நம் இந்திய தேசத்தின் ஜனநாயக மாண்பினைக் கட்டமைப்பதிலும், அதனை நிலை நாட்டுவதிலும் உறுதியாக இருந்தார்.

இளைஞர் சமுதாயம் கற்றறிவதன் மூலமே நாட்டின் வளர்ச்சியினை மேம்படுத்திட இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு, கல்விக்கான அரிய பல திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்திய பெருமைக்கு உரியவர். அன்னாருடையத் தியாகத்தையும், திறமையான நிருவாகத்தையும் பறைச்சாற்றுகின்ற வகையில், இந்தியாவின் பல மாநிலங்களில் உள்ள கல்வி நிலையங்கள், விளையாட்டு அரங்கங்கள், சாலைகள் உள்ளிட்ட பலவற்றிற்கு அவர் பெயர் சூட்டப்பட்டுப் பெருமைப்படுத்தப்பட்டார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களை "அறிவாற்றலுடன் நல்ல இதயத்தைக் கொண்டிருந்த அப்பெருமகன் குழந்தையின் மழலை கேட்டதும் தானும் குழந்தையாகி விடும் இயல்பினையும், ஏழைகள் வதைபடுவதைக் காணும் போது, அவர்கள் நிலையெண்ணிக் கண்ணீர் சிந்திடும் கனிந்த இரக்கத்தினையும்: நல் இதயத்தினையும் பெற்றவர்" என்று பெருமிதம் பொங்கிட குறிப்பிட்டு உள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1970ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டத்தில் நேரு கண்ட ஜனநாயகம் என்ற தலைப்பில் ஆற்றிய உரையில், "நீதிக்கு எதிரானவற்றையெல்லாம் நேர் நின்று எதிர்த்ததாலே நேருவானார். இந்திய நீள் எல்லைக் கோடுதனைப் பெரும் பகைவர் கடந்த போது என்ன நேருமோ என்றேங்கிய இந்திய மக்கள் நெஞ்சின் துயர்துடைத்து ஏதுவும் நேராது நான் இருக்குமட்டும் எனச் சொல்லி நேருவானார்." எனக் கவிபாடி பெருமை போற்றினார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், தன் வாழ்நாளின் இறுதிக் காலம் வரையில் குழந்தைகள், இளைஞர் நலன், அவர்களின் கல்வி வளர்ச்சி ஆகியவற்றிலேயே அதிகம் நாட்டம் கொண்டவராக இருந்தார். ஆசிய ஜோதி, மனிதருள் மாணிக்கம் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட பண்டித் ஜவஹர்லால் நேரு அவர்கள், குழந்தை களின்மீது கொண்டிருந்த அளவற்ற அன்பு காரணமாக அன்னாரது பிறந்த நாளான நவம்பர் 14ஆம் நாள் குழந்தைகள் தினமாக நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிறந்த தினமான நவம்பர் 14 ஆம் நாள் அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.